அரசாங்க நிர்வாகச் சுற்றறிக்கை: 02/2009

எனது இல: EST-4/SESSI/03/0301
அரசாங்க நிர்வாக,
உள்நாட்டலுவல்கள் அமைச்சு,
சுதந்திர சதுக்கம்,
கொழும்பு . 07
2009.02.06

அமைச்சுக்களின் செயலாளர்கள்,
மாகாண சபைகளின் தலைமைச் செயலாளர்கள்,
திணைக்களத் தலைவர்கள்.

**பொது துறைக்கு தேசிய வாழ்க்கைத்தொழிற் தகைமை (NVQ) முறைமையின் ஒன்றிணைப்பினால் ஆட்களை உட்சேர்ப்பதற்கான ஒரு திட்டம்**

பொதுத் துறையினரின் பதவிநிலைகளுக்கு ஆட்களை உட்சேர்க்கும் போது தேசிய வாழ்க்கைத்தொழிற் தகைமை (NVQ) முறைமையினை ஒரு வாழ்க்கைத்தொழில் தராதரமாக ஒன்றிணைக்கும் திட்டமாக செயற்படுத்த வாழ்க்கைத்தொழிற் தொழில் நுட்பப் பயிற்சி அமைச்சினால் ஒரு கோரிக்கை முன்வைக்கப்பட்டுள்ளது.

02. இதன் பிரகாரமாக பொதுத் துறையினரின் பதவிநிலைகளுக்கு ஆட்களை உட்சேர்க்கும் போது, சம்பள மற்றும் வெற்றிடநிரப்பு (காடர்) ஆணைக்குழுவானது பொருத்தமான பொதுத்துறை நிறுவனங்களின் சம்மதத்துடன், மூன்றாம்நிலை வாழ்க்கைத் தொழிற்கல்வி ஆணைக்குழுவினால் அறிமுகஞ் செய்து வைக்கப் பட்டுள்ள கீழ்க் குறிக்கப்பட்டுள்ள தேசிய வாழ்க்கைத்தொழிற் தகைமை முறைமைகளை ஒரு பதில் தராதரமாக அங்கீகரித்துள்ளது.

| கோவை இல: | தேசிய வாழ்க்கைத் தொழில் தகைமையின் நிலை | பொதுத் துறையினரின் சம்பளப்படி நிலைகளுக்கேற்ப கோவை இல: |
|---|---|---|
| 01 | நிலை 1 (NVQ 1) | அடிப்படை வகுப்பு – திறன்களற்ற PL - 1 –2006 |
| 02 | நிலை 2 (NVQ 2) அல்லது நிலை 3 (NVQ 3) | அடிப்படை வகுப்பு – பகுதித் திறன்கள் PL - 2 –2006 |
| 03 | நிலை 4 (NVQ 4) | அடிப்படை வகுப்பு – திறன்கள் PL –3 –2006 |
| 04 | நிலை 5 (NVQ 5) | முகாமைத்துவ உதவியாளர் – தொழில்நுட்பச் சேவை 3 MT - 1 - 2006 |
| 05 | நிலை 6 (NVQ 6) | முகாமைத்துவ உதவியாளர் – தொழில்நுட்பச் சேவை 2 MT - 1 - 2006 |

03. மேற்படி பந்தி 02 இல் குறிப்பிட்டுள்ள சம்பள அளவுத் திட்டங்களில் விதித்துள்ள பதவிகளில் கடமைகளை கருத்தில் கொண்டு தொடர்புடைய தொழில்களில் அல்லது விடயத்துறைகளில் தேசிய தொழிற் தகமை மட்டங்களையும் தகைமைகளாக உள்ளடக்குவதற்கு தேவையான நடவடிக்கைகளை மேற்கொள்ளவும்.

04. இது சம்பந்தமான மேலதிகத் தகவல்களை கீழ்க்குறிப்பிடப்பட்டுள்ள விலாசத்திலிருந்து பெற்றுக் கொள்ளலாம்.

பணிப்பாளர் நாயகம் மூன்றாம்நிலை வாழ்க்கைத்தொழிற் கல்வி ஆணைக்குழு,"நிபுணதா பியச"
இல.354/2, எல்விட்டிகல மாவத்தை, கொழும்பு 05.

மின்னஞ்சல் முகவரி – info@tvec.gov.lk
இணைய முகவரி – www.tvec.gov.lk

05. அரசாங்க சேவை ஆணைக்குழுவின் அனுமதியின் பேரில் இச் சுற்றறிக்கை வெளியிடப்படுகிறது.

ஒப்பம்/ டி. திசாநாயக்க,
செயலாளர்,
அரசாங்க நிர்வாக, உள்நாட்டலுவல்கள் அமைச்சு